بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/10/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**2022 ஆம் ஆண்டு அமெரிக்கா சுற்றுப்பயணம் அருளுக்குரியதாகவும் வெற்றிகரமானதாகவும் நிறைவடைந்த விபரங்கள், விருந்தினர்களின் கருத்துகள் மற்றும் அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளைப் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த நாட்களில் அமெரிக்காவின் சில ஜமாஅத்துகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தேன். அது மிகவும் சிறப்புடன் முழுமை அடைந்தது. MTA மற்றும் ஜமாஅத்தின் இதர எலக்ட்ரானிக் மீடியாக்கள் வாயிலாக அனைத்து செய்திகளும் வந்து கொண்டிருந்தன. அதே வேளையில் உலக சேனல்களும் அதிக கவரேஜ் வழங்கிக் கொண்டிருந்தன. எல்லா விதத்திலும் அல்லாஹுத்தஆலாவின் அருள்களின் காட்சிகளைப் பார்க்க முடிந்தது. நம்மவர்கள் மற்றும் அந்நியர்கள் இடத்திலும் பெரும் வலுவான தாக்கங்கள் ஏற்பட்டன. மக்களுடைய சந்திப்புகளுக்குப் பிறகு உணர்வுப்பூர்வமான தாக்கங்களின் ஒரு பெரிய பட்டியல் இருக்கின்றது.

எல்லா இடத்திலும் தொழுகைகளில் பெண்கள், குழந்தைகள் மற்றும் மக்களது வருகையானது ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பை விட அதிகமாகவே இருந்தது. மக்களது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டில் இருந்து, அவர்களுடைய உள்ளத்தில் கிலாஃபத்துடன் நேசம், கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசம் இருப்பது தெளிவாகத் தென்பட்டது. கற்றறிந்தவர்கள், ஏழை பணக்காரர், சிறியவர் பெரியவர் மற்றும் பௌதீக ரீதியாகப் பணியில் மூழ்கியிருக்கும் மக்களும் பல மணி நேரங்கள் மஸ்ஜிதுக்குள் தொழுகையில் கலந்து கொள்வதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தனர். இந்த மக்களிடத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம், அல்லாஹுத்தஆலாவின் அருளால் மார்க்கம் மற்றும் ஜமாஅத் மீதான நேசம் மற்றும் கிலாஃபத்துடனான தொடர்பானது அமெரிக்க ஜமாஅத்தின் மக்களது உள்ளத்தில் இருக்கின்றது என்பதன் வெளிப்பாடு ஆகும். 11, 12 வயதுடைய சிறார்களும் கோவிட் பரிசோதனை போன்றவற்றிற்காகப் பல மணி நேரங்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஆனால் எவரும் ஒருபோதும் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அமெரிக்க ஜமாஅத் மக்களிடம் இந்த கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வின் காட்சிகள் எப்போதும் நிலை பெற்றிருக்க வேண்டும். பள்ளி வாயில்களும் இதே

போன்று நிரம்பியிருக்க வேண்டும். அமெரிக்காவில் மக்கள் மார்க்கத்தை மறந்து விடுகின்றனர். ஆனால், எனக்குப் பெரும்பாலான மக்களிடம் இதன் பால் கவனம் தென்பட்டது. பொருளாதார ரீதியிலும் பலவீனமான மக்களும் தாங்களும் தங்களது பிள்ளைகளும் மார்க்கத்துடன் ஒன்றியிருக்க குறிப்பாக துஆக்கள் செய்து வந்தனர். அல்லாஹுத்தஆலா அவர்களது கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தை எப்போதும் அதிகரித்துக் கொண்டே செல்வானாக!

லஜ்னா, அன்சார், குத்தாம் மற்றும் குழந்தைகளும் மிகக் கடின உழைப்புடன் இந்த நாட்களில் தங்களது டியூட்டிகளை செய்து வந்தார்கள். பற்பல நாட்கள் விழித்திருந்து ஆயத்தங்களை மேற்கொண்டனர். வருகையும், எல்லா இடங்களிலும் ஆயிரக்கணக்கில் இருந்தது. பைத்துர் ரஹ்மானிலோ ஆண்டு மாநாட்டை விட அதிகமான வருகை இருந்தது. ஆயினும் மிகச் சிறந்த முறையில் தங்களது பணிகளை செய்தார்கள். அல்லாஹுத்தஆலா அமெரிக்க ஜமாஅத் மக்களின் இந்த மாறுதலைத் தற்காலிகமானதாக அல்லாமல், நிரந்தரமானதாக ஆக்குவானாக! அல்லாஹுத்தஆலா மற்றவர்களது உள்ளத்திலும் வழக்கத்திற்கு மாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். அல்லாஹுத்தஆலா அவர்களது உள்ளத்தை மேலும் திறப்பானாக! இந்த மக்கள் உண்மையை கண்டறிபவர்களாக ஆகட்டுமாக!

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* சீயோனில் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாயிலின் திறப்பு விழாவில் முஸ்லிம் அல்லாதவர்களும் ஜமாஅத் சாராத விருந்தினர்களும் 161 பேர் கலந்து கொண்டனர். அவர்களுள் காங்கிரஸ் மேன், காங்கிரஸ் விமன், மேயர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள் மற்றும் வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய மக்கள் கலந்து கொண்டார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல்வேறு விருந்தாளிகளின் தாக்கங்களை எடுத்துரைத்தார்கள். அவற்றுள் சில எடுத்துரைக்கப்படுகின்றன. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

**சீயோன் நகரின் மேயர் பில்லி மேக்கேனீ ஸாஹிப்** தமது தாக்கங்களை எடுத்துரைத்தார்கள். அதில் **அவர்கள் கூறினார்கள்:** 'அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய வழிகாட்டி அவர்களை ஃபத்ஹே அஸீம் மஸ்ஜிதுடைய திறப்பு விழாவின் சந்தர்ப்பத்தில் வரவேற்பது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும். இந்த வணக்கஸ்தலம் நமது இறந்த காலம் மற்றும் எதிர்காலத்திற்கு இடையே ஒரு பாலமாக செயல்பட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். அஹ்மதிய்யா கம்யூனிட்டி சார்பாக, இந்த நகரத்திற்கு மிகச் சிறந்த தொண்டுகள் ஆற்றப்பட்டுள்ளன. அதற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன். மேலும், நாங்கள் இந்த நகரின் திறவுகோலை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் வசம் ஒப்படைக்கின்றோம்.'

**மெம்பர் ஆஃப் எல்லினோயே ஜெனரல் அசெம்பிளி, மதிப்பிற்குரிய ஜாய்ஸ் மேசன் அவர்கள் கூறினார்கள்:** 'இங்கு சீயோனில் இந்தப் பள்ளிவாயிலின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வின் அங்கமாக ஆவது எனக்கு ஒரு கண்ணியத்திற்குரிய விஷயமாகும். இன்று இந்த நகரத்தின் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தினம் ஆகும். அலெக்சாண்டர் டூயி இந்த நகரின் கதவுகளைத்

தன்னை ஏற்றுக்கொண்ட மக்களைத் தவிர மற்ற அனைவருக்காகவும் மூடியிருந்தார். ஆனால் இன்று இந்த நகரின் கதவுகள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. இதற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்திற்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பள்ளிவாயில் இந்த நகரத்திற்காக மட்டுமின்றி, நாலாபுறத்திற்காகவும் நம்பிக்கையின் ஒரு கதிராக ஆகிவிட வேண்டும் என்பது எனது உள்ளத்தின் ஆசையாகும். நான் இந்த கம்யூனிட்டிக்கு இந்தப் பள்ளிவாயிலின் திறப்பு விழாவிற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்தவாறு, சட்டசபையில் ஒரு தீர்மானத்தையும் எடுத்து வைக்கின்றேன்.'

**ஜெனிஃபர் என்ற ஒரு விருந்தாளி கூறுகின்றார்கள்:** 'தங்களுடைய ஜமாஅத்தின் கோட்பாடுகளைப் பற்றி பேசினோம் என்றால், அவை அனைத்தையும் விட உயர்ந்தவையாகும். நீங்கள் சீயோன் நகருக்குள் பாதம் பதிக்கும் போது ஒரு பழைய கட்டடத்தில் **எல்லோரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு** என்ற தூதுச் செய்தியைக் கொண்ட **motto** தென்படுகின்றது. அதன் எதிரொலி உங்களுடன் இருக்கின்றது. இது இந்த சீயோன் நகரின் அசல் ஆன்மாவாகும்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* டேலாஸிலும் பள்ளிவாயில் திறக்கப்பட்டது. அதில் முஸ்லிம் அல்லாதவர்கள் மற்றும் ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்கள் 140 பேர் கலந்து கொண்டார்கள். **ஆலன் நகரின் சிட்டி கவுன்சிலின் உறுப்பினர் நகரின் திறவுகோலை வழங்கினார்கள். அவர்கள் கூறினார்கள்:**

'இன்று பைத்துல் இக்ராம் பள்ளிவாயிலின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வது ஒரு பெரும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு அதற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இந்த நகரின் தேவையுடையவர்களுக்கு உதவி செய்கின்ற அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தொண்டுகளைப் பாராட்டுகின்றோம். அமைதியை விரும்புகின்ற, மனிதநேய தொண்டுகளை செய்கின்ற ஒரு சமுதாயம் இந்த மஸ்ஜிதை உருவாக்கி இருப்பது இந்த நகரின் நற்பாக்கியம் ஆகும். இந்தப் பள்ளிவாயில், இந்த நகரம் மற்றும் இந்தப் பகுதிக்கு நம்பிக்கையின் ஒரு கதிராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'

**சதர்ன் யூனிவர்சிட்டீஸின் பேராசிரியர் டாக்டர் ராபர்ட் ஹன்ட்** இந்த நிகழ்ச்சியில் அழைக்கப்பட்டமைக்கு ஜமாஅத்துக்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும், **அவர்கள் கூறினார்கள்:** 'அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இரண்டு சிறப்புகளை மேலோங்க செய்வதற்காக அர்ப்பணித்துள்ளார்கள். அவற்றில் முதலாவது, மத சுதந்திரம் மற்றும் இரண்டாவது, மதங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்துதல் ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத் அநீதிக்கு இலக்காகி இருக்கிறது என்பதற்கு வரலாறு சாட்சி ஆகும். இதன் காரணத்தினாலேயே இந்த ஜமாஅத் மார்க்க சுதந்திர முயற்சிகளில் முதல் வரிசையில் இருந்திருக்கிறது. நாம் ஒருவர் மற்றவரது மத சுதந்திரத்திற்கு கண்ணியம் அளிக்காத வரை நம்மால் வேற்றுமை பாராட்டுவதை கட்டுக்குள் கொண்டு வர முடியாது.

**சுல்தான் சௌத்ரி சாஹிப் எனும் ஒரு முஸ்லிம் விருந்தாளி கூறினார்கள்:** 'அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் உலகிற்கு சமாதானத்தின் ஒரு சிறந்த தூதுச் செய்தியை வழங்கி இருக்கிறார்கள்.' **டாக்டர் ஹலீமுர் ரஹ்மான் சாஹிப் எனும் ஒரு முஸ்லிம் விருந்தாளி கூறினார்கள்:** 'இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடு மற்றும் விருந்து உபசரிப்பு நம்ப முடியாததாக இருந்தது. நான் எனக்கு வழங்கப்பட்ட கண்ணியத்திற்குத் தகுதியானவனாக இருக்கவில்லை. இவ்வனைத்து சூழ்நிலையையும் கண்டு தாங்கள் வழங்கிய கண்ணியத்தால் எனது கண்கள் ஈரமாகிவிட்டன. எனக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்படுகின்ற சிறந்த மக்களிடையே நேரத்தைக் கழிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.'

**விக்டோரியா சாஹிபா என்கிற பெண் கூறுகின்றார்கள்:** 'எனக்கு இங்கு மிகவும் சிறப்பான விஷயமாகத் தோன்றியது ஜமாஅத்தின் இமாமது சொற்பொழிவு ஆகும். எவ்வாறு மார்க்க வேற்றுமைகள் மற்றும் பல்வேறு கருத்துக்கள் இருந்தும் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டவர்களாக இருக்கின்றோம். மேலும் இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இன்றைய நாட்களில் மதங்களால் கூறப்படுகின்ற வார்த்தைகளில் தென்படுவதில்லை.'

பிறகு **மேரி மேக்டர் மேட் எனும் ஒரு பெண் விருந்தாளி** இருந்தார்கள். இவர்கள் இந்தப் பள்ளிவாயிலுக்கு அருகில் வசிப்பவர் ஆவார்கள். மேலும் இவர்களது பெரியதொரு நிலம் உள்ளது. இவர்கள் அந்த இடத்தை பார்க்கிங்காக அளித்திருக்கின்றார்கள். அவர்கள் **கூறுகிறார்கள்:** 'நான் இதற்கு முன்பு ஒருபோதும் நிலத்தின் இந்தத் தூசி படிந்த பகுதியைப் பற்றி, இன்று இந்த நிகழ்ச்சிக்காக இடத்தை வழங்கியதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியின் அளவுக்கு மகிழ்ச்சி அடைந்ததில்லை.'

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* டேலாஸில் இருந்து **50,55** மைல் தொலைவிலுள்ள ஃபோர்ட் வொர்த் என்ற இடத்தில் 4¾ (நாலே முக்கால்) ஏக்கர் அளவில் ஒரு கட்டடம் வாங்கப்பட்டிருந்தது. அங்கு பள்ளிவாயிலின் வடிவத்தைக் கொடுப்பதற்காக ஒரு குவிமாடமும் இரண்டு மினாராக்களும் கட்டுவதற்கான நிகழ்ச்சி உள்ளது. நல்ல இடம். ஜமாஅத் மக்கள் இங்கு தொழவும் செய்கிறார்கள். எனக்கும் அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைத் தொழ வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

**ஃபோர்ட் வொர்த்தில் வசிக்கின்ற ஏபே கிர்க் என்ற ஒரு விருந்தாளி** வந்திருந்தார். இவர் டேலாஸில் பள்ளிவாசல் திறப்பு விழாவின்போது வருகை தந்திருந்தார். இவர் **கூறுகிறார்:** 'இமாமே ஜமாஅத் அவர்கள் இறைவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்றும் தூதுச் செய்தியை மிகவும் சிறந்த முறையில் வழங்கினார்கள். அமைதி மற்றும் நியூக்ளியர் போரில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான தூதுச் செய்தி, எனக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.'

**ஃபோர்ட் வொர்த்திலிருந்து ஒரு சர்ச்சின் மெம்பர் டேலாஸுக்கு வருகை தந்திருந்தார். அவர் கூறுகிறார்:** 'தூதுச் செய்தி மிக அருமையாக இருந்தது.

ஒவ்வொருவரும் கலீஃபாவின் இந்தத் தெளிவான தூதுச் செய்தியை அவசியம் கேட்க வேண்டும்.'

**ஹை ஸ்கூல் இன் ஒரு டீச்சர் கூறுகிறார்:** 'காலத்தின் கலீஃபாவின் இரண்டு விஷயங்கள் என்னை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கின. அவற்றில் ஒன்று, அவர்கள் சமுதாயத்திற்குள் இஸ்லாத்திற்கு எதிராக ஒதுக்கீடு இருக்கின்றது என்பதை ஒப்புக் கொண்டார்கள். எனது மாணவர்களுக்குள்ளும் நான் இதனைக் கண்டு வருகிறேன். நான் மிகவும் பாராட்டும் மற்றொரு விஷயம், கலிஃபா அவர்கள் நியூக்ளியர் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரித்தது ஆகும். இன்றைய சூழ்நிலைகளில் இவ்வகையிலான மதிநுட்பமிக்க தூதுச் செய்தியை கேட்டு மிகவும் நன்றாக இருந்தது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* சீயோனின் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசலில் டூயீயுடனான முபாஹலா தொடர்பாக ஒரு கண்காட்சியும் வைக்கப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மஜ்முஆ இஷ்திஹாராத்தின் மூன்றாம் பாகத்தில் 32 செய்தித்தாள்களின் பெயர்களை எழுதியுள்ளார்கள். அவற்றில் இந்த முபாஹலா பற்றிய குறிப்பு உள்ளது. ஜமாஅத்தே அஹ்மதிய்யா அமெரிக்காவின் ஆராய்ச்சிகளின் அடிப்படையில், இந்த முபாஹலா பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ள மேலும் 128 செய்தித்தாள்கள் கிடைத்துள்ளன. இவ்வாறாக அமெரிக்காவில் மட்டுமே மொத்தம் 160 செய்தித்தாள்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வனைத்து செய்தித்தாள்களும் டிஜிட்டல் வடிவில் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று பல்வேறு செய்தித்தாள்கள் மற்றும் நியூஸ் சேனல்களிலும் என்னுடைய சுற்றுப்பயணம் தொடர்பாக செய்திகள் வெளியாகி உள்ளன.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கிறிஸ்தவத்திலிருந்து அஹ்மதியாக ஆன அமெரிக்காவைச் சார்ந்த ஒரு புதிய அஹ்மதி கிறிஸ்டோஃபர் ஸாஹிப் அவர்களின் பைஅத் பற்றி எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:*

இந்த பைஅத்தினால் பழைய மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்துள்ள இடம் பெயர்ந்த அஹ்மதிகள் இடையேயும் ஒரு நல்ல தாக்கம் ஏற்பட்டது. அவர்களுக்கும் பைஅத் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. இதனால் மிகவும் உணர்ச்சி மிகுந்த சூழ்நிலை உருவாகி இருந்தது. எவ்வாறாகிலும் அல்லாஹுத்தஆலா இந்த சுற்றுப்பயணத்தில் ஒட்டுமொத்தமாக எல்லா விதத்திலும் தனது அருள்களை வழங்கியுள்ளான். அல்லாஹுத்தஆலா இனிமேலும் எப்பொழுதும் வழங்கிக் கொண்டே செல்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**